சென்னை மெட்ரோ ரெயில்

# இரண்டாம் கட்ட சேவைக்கு 50 சதவீத நிதியை ஒதுக்க வேண்டும்!

## பிரதமர் மோடியிடம் எடப்பாடி கோரிக்கை!!

சென்னை. பிப்.14

சென்னை விமான நிலையத்தில் முடிவடையும் மெட்ரோ ரெயில் சேவையை வண்டலூர் புறநகர் பேருந்து நிலையம் வரை நீட்டிப்பு செய்யப்பட ஆவன செய்ய வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையில் வண்ணாரப்பேட்டை–விம்கோ நகர் இடையே ரூ.3,770 கோடியில் மெட்ரோ ரெயில் திட்டம் விரிவாக்கம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதே போன்று மேலும் 2 ரெயில் திட்டங்கள்நிறைவுசெய்யப்பட்டுள்ளன. மொத்தத்தில் ரூ.4,486 கோடி செலவில் 3 ரெயில்திட்டங்கள்முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.2,640கோடிசெலவில் கல்லணை கால்வாய் சீரமைப்புத்திட்டம் மற்றும் ரூ.1000 கோடி செலவில் சென்னையில்உள்ளஇந்திய தொழில்நுட்பம் சார்பில் ஆராய்ச்சி வளாகம் அமைக்கும் திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள்தொடர்பாகமுதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, டெல்லிசென்றபோது பிரதமர்மோடியுடன்ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில், முடிக்கப்பட்ட திட்டங்களை தொடங்கிவைக்கவும்,புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் பிரதமர் மோடி சென்னைவந்தார். நேருஉள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர்எடப்பாடிபழனிசாமி பேசியதாவது:–

தமிழகத்தில் முடிவுற்ற திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக நான் நேரில் சென்று பிரதமருக்கு அழைப்புவிடுத்தேன்.இந்த அழைப்பினைஏற்றுபிரதமர் மோடி சென்னை வந்ததற்காக நன்றி தெரிவித்துள்ளேன்.

தமிழகத்தில்கொரோனா தொற்று குறைந்துள்ளது. கொரோனா காலத்திலும் முதலீட்டாளர்களை ஈர்க்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சிறந்த முறையில் நமது நாட்டில் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைஉலகநாடுகள்பெரிதும் பாராட்டுகின்றன. சிறந்தமுறையில்தயாரிக்கப்பட்டதடுப்பூசிகள்வெளிநாடுகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன. தடுப்பூசி போடும் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேலும் பல்வேறு மாநிலங்களில் தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் வழிமுறைகளை பின்பற்றி வருகின்றனர்.

மக்களின்போக்குவரத்து நேரத்தை குறைப்பதற்காகவும், போக்குவரத்து நெரிசலை

5–ம் பக்கம் பார்க்க

## இரண்டாம் கட்ட...

1–ம் பக்கத் தொடர்ச்சி

கட்டுப்படுத்தவும் மெட்ரோ ரெயில் சேவை மறைந்தமுதலமைச்சர்ஜெயலலிதாவினால் சென்னையில்தொடங்கிவைக்கப்பட்டது. இதற்காக நிதி ஒதுக்கீடும்செய்யப்பட்டது. இந்ததிட்டம்தற்போதுசிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு முனைப்புடன் மெட்ரோரெயில்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் பயணிகள் சேவை முழுமையாக நடைபெற்று வருகிறது.

மெட்ரோ ரெயில் 2–ம் கட்ட சேவைக்கு 50 சதவீத நிதியை மத்திய அரசு விடுவிக்க வேண்டும். சென்னை விமான நிலையத்தில் முடிவடையும்மெட்ரோரெயில் சேவை வண்டலூர் புறநகர் பேருந்து நிலையம் வரை நீட்டிப்புசெய்வதற்கானசாத்திய கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூரில் மெட்ரோ ரெயில் சேவையை துவங்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அணைக்கட்டு விரிவாக்க திட்டத்திற்கு போதுமானநிதியை ஒதுக்குமாறு மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் நீர் மேலாண்மை திட்டத்தின் மூலம் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. 76 சுரங்கங்கள், 20 பாலங்கள், 403 ஏரிகள் உள்ளிட்டவை புனரமைக்கப்படும். இதன் மூலம் தஞ்சை, புதுக்கோட்டைஉள்ளிட்டமாவட்டங்களில் 67,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். கல்லணை தமிழர்களின் பெருமையைஇன்றும்பறைசாற்றி வருகின்றது. நீர் மேலாண்மைதிட்டம்மூலம் தமிழகம் மேலும் சிறப்பு பெற்று வருகிறது.

ரூ.1 லட்சம் கோடி அளவிற்கு நெடுஞ்சாலை திட்டங்களை அறிவித்த பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதிமுக அரசு நீர் மேலாண்மைதிட்டங்களை சிறப்பானமுறையில்செயல்படுத்தி வருகிறது.

இவ்வாறு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.